## கொட்டிகாவத்தை முல்லேரியாவ பிரதேச சபை
## கொழும்பு மாவட்டம்

---

## 1. நிதிக்கூற்றுக்கள்

### 1.1 நிதிக்கூற்றுக்கள் சமர்ப்பித்தல்

2019 ஆம் ஆண்டிற்கான நிதிக்கூற்றுக்கள் 2020 மார்ச் 11 ஆந் திகதி கணக்காய்விற்குச் சமர்ப்பிக்கப்பட்டிருந்தன. அந்த நிதிக்கூற்றுக்கள் மீதமான கணக்காய்வாளர் தலைமை அதிபதியின் பொழிப்பறிக்கை 2020 செப்டெம்பர் 11 ஆந் திகதியன்று விரிவான முகாமைத்துவ கணக்காய்வு அறிக்கை 2020 டிசெம்பர் 14 ஆந் திகதியும் தலைவருக்கு அனுப்பிவைக்கப்பட்டன.

### 1.2 முனைப்பழியுள்ள அபிப்பிராயம்

எனது அறிக்கையின் முனைப்பழியுள்ள அபிப்பிராயத்திற்கான அடிப்படைப் பகுதியில் விபரிக்கப்பட்ட விடயங்களினாலான தாக்கத்தைத் தவிர, கொட்டிகாவத்தை முல்லேரியாவ பிரதேச சபையின் 2019 டிசெம்பர் 31 இல் உள்ளவாறான நிதி நிலைமையினையும் அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான அதனது நிதிசார் செயலாற்றலினையும் பொதுவாக ஏற்றுக்கொள்ளப்பட்ட கணக்கீட்டுத் தத்துவங்களுக்கு இணங்க நிதிக்கூற்றுக்கள் உண்மையாகவும் நியாயமாகவும் தருகின்றன என்பது எனது அபிப்பிராயமாகும்.

### 1.3 முனைப்பழியுள்ள அபிப்பிராயத்திற்கான அடிப்படை

#### 1.3.1 கணக்கீட்டுக் குறைபாடுகள்

| | கணக்காய்வு அவதானிப்பு | பரிந்துரை | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
|---|---|---|---|
| (அ) | அம்பதலே சந்தியில் அமைக்கப்பட்டிருந்த மணிக்கூட்டு கோபுரத்தை பராமரிப்பதற்கு 2015 ஆம் ஆண்டில் ஏற்பட்ட மீண்டுவரும் செலவினம் ரூபா 598,000 ஆகும். இது இயந்திரங்களும் இயந்திர சாதன கணக்கில் கணக்கிலிடப்பட்டு திருத்தம் செய்யப்படாதிருந்தது. | தேவையான திருத்தம் மேற்கொள்ளப்பட வேண்டும். | கிராமோதயக் கோட்பாட்டின் கீழ் நிறுவப்பட்ட இந்த மணிக்கூட்டுக் கோபுரத்தின் 2015 ஆம் பராமரிப்பு செலவினம் தவறுதலாக சொத்துக் கணக்கிலடப்பட்டுள்ளது. அது 2020 இறுதிக்கணக்கில் சீராக்கப்படும். |
| (ஆ) | கழிவுப் பொருட்களை டோஸர் செய்தல் மண்ணைச் களக்குதல் வீதிகளை செப்பனிடுதல் என்பனவற்றிற்கு 2019 நவெம்பர் 26 முதல் டிசெம்பர் 31 வரை செலுத்தப்பட வேண்டிய ரூபா 913,100 கணக்கிடப்படவில்லை . | பிழையின்றிக் கணக்கிடப்பட வேண்டும். | ஏற்றுக்கொள்கிறோம் 2020 இறுதிக் கணக்கு தயாரிக்கும் போது சீராக்கப்படும். |
| (இ) | வாடகை அடிப்படையில் பெறப்பட்ட இரு டிப்பர்களின் பொருட்டு 2019 டிசெம்பர் 14 தொடக்கம் டிசெம்பர் 31 வரை | பிழையின்றி கணக்கில் இடப்பட வேண்டும். | ஏற்றுக்கொள்கிறோம் 2020 இறுதிக் கணக்கு தயாரிக்கும் போது சீராக்கப்படும். |

| | | | |
|---|---|---|---|
| | கொடுப்பனவு செய்யப்பட வேண்டிய ரூபா 792,000 கணக்கில் இடப்படவில்லை. | | |
| (ஈ) | முன்னய ஆண்டிற்கும் நடப்பாண்டிற்குமான சபை பெற்றுக் கொண்ட பெறுமதி சேர்வரியில் வருவாயிலிடக் கூடியவற்றை சீராக்கல் செய்யாமையால் கொடுப்பனவு செய்ய வேண்டிய பெறுமதி சேர்வரி ரூபா 206,946 அதிகரித்ததும் ஆண்டிற்கான மிகை மற்றும் திரண்ட நிதி என்பன முறையே ரூபா 206,946 மற்றும் ரூபா 75,039 என்பனவற்றால் குறைத்தும் கணக்கிலடப்பட்டிருந்தன. | பிழையின்றி கணக்கில் இடப்பட வேண்டும். | ஏற்றுக்கொள்கிறோம் 2020 இறுதிக் கணக்கு தயாரிக்கும் போது சீராக்கப்படும். |
| (உ) | மீளாய்வாண்டின் இறுதித் தினத்தன்று கையிருப்பு நேரடியாக சரி, பிழை பார்க்கப்படாது கையிருப்பாக கணக்கிலிருந்த ரூபா 56,521,168 மீதி இறுதிக் கையிருப்பாகக் கணக்கிலிடப்பட்டிருந்தது. | நேரடியாக சரி பிழை பார்க்கப்பட்டு தேவையான சீராக்கல் மேற்கொள்ளப்பட வேண்டும். | உருப்படியாக உள்ள களஞ்சியக் கையிருப்பினை நேரடியாக சரி பிழை பார்த்து கணக்கில் சீராக்கல் செய்து 2020 இறுதிக் கணக்கு தவறில்லாது சமர்ப்பிக்கப்படும். |
| (ஊ) | இயந்திர சாதன மற்றும் உபகரணத்தின் ஆரம்ப மீதியை திருத்தம் செய்வதற்கு குறித்த சொத்துக் கணக்கில் ரூபா 44,050 வரவு வைத்து மூலதனப் பாவனைக்கு வருவாயின் பங்களிப்புக் கணக்கில் செலவு வைப்பதற்கு பதிலாக திரண்ட நிதியக் கணக்கில் செலவு வைக்கப்பட்டிருந்தது. | பிழையின்றி கணக்கிலிடப்பட வேண்டும். | ஏற்றுக்கொள்கிறோம் 2020 இறுதிக் கணக்கு தயாரிக்கும் போது சீராக்கப்படும். |
| (எ) | சபையின் பிரதான கொடுக்கல் வாங்கல்களை மேற்கொள்ளும் 3 நடைமுறை கணக்குளது காசேட்டு மீதிக் கூட்டுத்தொகையில் ரூபா 52,126,242 வார மீதி காணப்பட்ட போதும் அம்மீதி நிதிக் கூற்றுக்களில் ரூபா 203,132,806 கூட்டுத்தொகையாகக் காட்டப்பட்டிருந்தது. | தேவையான திருத்தம் மெற்கொள்ளப்பட வேண்டும் | ஏற்றுக்கொள்கிறோம் 2020 இறுதிக் கணக்கு தயாரிக்கும் போது சீராக்கப்படும். |
| (ஏ) | உள்ளூர்க் கடன் மற்றும் அபிவிருத்தி நிதியக் கடன் கணக்கில் 2019 டிசெம்பர் 31 இல் உள்ளவற்றிருந்த மீதி ரூபா | தேவையான திருத்தம் மெற்கொள்ளப்பட வேண்டும் | ஏற்பட்ட பிழையை திருத்திச் சமர்ப்பிப்பத்ற்கு நடவடிக்கை |

| | | | |
|---|---|---|---|
| | 9,184,387 ஆகும். எவ்வாறாயினும், நிதிக் கூற்றுக்களில் அது ரூபா 9,736,651 ஆகக் காட்டப்பட்டிருந்தது. | | எடுக்கப்படும். |
| (ஐ) | கம்பெக்டர் வாகனத்தின் பொருட்டு முத்திரை வருவாயிலிருந்து செலுத்தப்பட்ட ரூபா 982,000 மூலதனமாக்கப்படவில்லை. | பிழையின்றி கணக்கிலிடப்பட வேண்டும். | ஏற்றுக்கொள்கிறோம். 2020 இறுதிக் கணக்கு தயாரிக்கும் போது சீராக்கப்படும். |
| (ஒ) | கம்பெக்டர் வாகன தவணைப் பணத்தைச் செலுத்துகையில் முன்னைய ஆண்டிலும் நடப்பாண்டிலும் நீதிமன்றத் தண்டப்பண வருவாயில் ஈடுசெய்யப்பட்ட செலவு கணக்கிலிடப்படாமையால் திரண்ட நிதியக் கணக்கில் ரூபா 310,000, ஆண்டிற்கான செலவினம் ரூபா 982,000 பெற வேண்டிய நீதிமன்ற தண்டப்பணம் ரூபா 1,292,000 என குறைவாகக் கணக்கிலிடப்பட்டிருந்தன. | பிழையின்றி கணக்கிடப்பட வேண்டும். | ஏற்றுக்கொள்கிறோம் 2020 இறுதிக் கணக்கு தயாரிக்கும் போது சீராக்கப்படும். |
| (ஓ) | நடப்பாணடில் புத்தகங்களிலிருந்து நீக்கப்பட்ட ரூபா 162,194 பெறுமதியான நூலகப்புத்தகங்கள் மூலதனத்திற்கு வருவாயின் பங்களிப்பு கணக்கில் வரவு வைக்கப்படாது திரண்ட நிதியத்தில் வரவு வைக்கப்பட்டிருந்தது. | பிழையின்றி கணக்கிலிடப்பட வேண்டும். | ஏற்றுக்கொள்கிறோம் 2020 இறுதிக் கணக்கு தயாரிக்கும் போது திருத்தப்படும். |
| (ஔ) | நேரடியாக களஞ்சியத்தில் காணக் கிடைக்காத ரூபா 306,989 பெறுமதியான களஞ்சிய பொருட்களது கையிருப்பு கையிருப்புக் கணக்கில் உள்ளடக்கப்பட்டிருந்தது. | பிழையின்றி கணக்கிலிடப்பட வேண்டும். | இவ்வாறு காணப்படும் களஞ்சியப் பொருள் கையிருப்பு இல்லாமையால் 2020 கணக்குகளில் திருத்தம் செய்யப்படும். |

### 1.3.2 கணக்கிணக்கம் செய்யப்படாத கணக்குகள்

| கணக்காய்வு அவதானிப்பு | பரிந்துரை | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
|---|---|---|
| கடை வாடகை கணக்கிலும் நானாவித வைப்பு கனக்கிலும் உள்ள மிதிகளை தொடர்புடைய பட்டோலையுடன் கணக்கினக்கம் செய்தபோது ரூபா | குறித்த மீதி வித்தியாசத்தைக் கணக்கீனக்கம் செய்து கணக்கு | சரியான மீதியை கணக்கிலிட்டு இத்தவறைத் திருத்துவதற்கு |

| | | | |
|---|---|---|---|
| 157,212 அவதானிக்கப்பட்டது. | வித்தியாசம் | திருத்தம் செய்யப்பட வேண்டும். | நடவடிக்கை எடுக்கப்படும். |

### 1.3.3 கணக்காய்வீதகான சான்றின்மை

| கணக்காய்வு அவதானிப்பு | பரிந்துரை | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
|---|---|---|
| கூட்டுத் தொகைப் பெறுமதி ரூபா 55,933,798 ஆகவிருந்த 04 கணக்கீட்டு விடயங்கள் சம்மந்தமான சான்றுகள் கணக்காய்வுக்குச் சமர்பிக்கப்படவில்லை | தேவையான கணக்காய்வுச் சான்றை சமர்ப்பிப்பதற்கு நடவடிக்கை எடுக்க வேண்டும் | இது 2003 ஆம் ஆண்டுடன் தொடர்புடையது. இப்பெறுமதிக்கு போதிய சான்றுகளை சமர்பிக்க இயலாதுள்ளது என்பதைத் தயவுடன் தெரிவிக்கின்றோம் |

### 1.4 இணங்காமை

### 1.4.1 சட்டங்கள், விதிகள், பிரமாணங்கள், முகாமைத்துவத் தீர்மானங்களுடன் இணங்காமை

| | கட்டங்கள், விதிகள், பிரமாணங்கள், முகாமைத்துவத் தீர்மானங்களுடனான தொடர்பு | பெறுமதி | இணங்காமை | பரிந்துரை | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
|---|---|---|---|---|---|
| | | ரூபா | | | |
| (அ) | 1987 ஆம் ஆண்டின் 15 ஆம் இலக்க பிரதேச சபைகள் அதிகார சட்டத்தின் 127 ஆம் பிரிவு | - | சபையின் அதிகாரத்திற்கு உட்பட்ட பிரதேசத்தில் உள்ள 05 மயானங்களை சுவீகரிப்பதற்கு நடவடிக்கை எடுக்கவில்லை. | மயானங்களைச் சபை சுவீகரிப்பதற்கு நடவடிக்கை எடுக்க வேண்டும். | சபையினது 05 மயானங்களினது எல்லைகள் நிர்ணயக்கப்பட்டு உள்ளன. பிரதேச செயலாளரின் அங்கீகாரம் பெறப்பட்டவுடன் சபை அவற்றை சுவீகரிப்பதற்கான வர்த்தமாணிப் பிரசுரத்தை வெளியிடும். |
| (ஆ) | இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசின் நிதிப் பிரமானம் 571 | 3,211,549 | 02 ஆண்டுகளைக் கடந்த ரூபா 118,263 வைப்பு தொடர்பாக நடவடிக்கை எடுக்கவில்லை. | நிதிப் பிரமாணப்படி நடவடிக்கை எடுக்க வேண்டும் | செலுத்தப்படாத சம்பளத்தை சபையின் வருவாயில் இடுவதற்கு |

| | | | | |
|---|---|---|---|---|
| | | | | நடவடிக்கை எடுக்கப்படும். |
| (இ) | அரச கணக்குச் 600,000 சுற்றறிக்கை இலக்கம் 3/2015 | விசேட பணியொன்றின் பொருட்டு நிறை வேற்றுதர உத்தியோகத்தருக்கு மாத்திரம் ஒரு சந்தர்ப்பத்தில் அதி கூடுதலாக ரூபா 100,000 இடைக்கால முற்பணமாக வழங்கப்படலாம். எவ்வாறாயினும், 04 நிறைவேற்று தரத்தைச் சாராத உத்தியோத்தர் களுக்கு 06 சந்தர்ப்பங்களில் ரூபா 100,000 வீதம் இடைக்கால முற்பணம் வழங்கப்பட்டிருந்தது. | நிறைவேற்றுதர உத்தியோகர்க ளுக்கு மாத்திரம் இடைக்கால முற்பணம் வழங்கப்படலாம். | எதிர்காலத்தில் நிறைவேற்றுதர உத்தியோகத்தர் களுக்கு மாத்திரமே முற்பணம் வழங்க இயன்றளவு நடவடிக்கை எடுக்கப்படும். |

**2. நிதிசார் மீளாய்வு**

**2.1 நிதிப் பெறுபேறுகள்**

சமர்ப்பிக்கப்பட்ட நிதிக்கூற்றுக்களின் பிரகாரம், 2019 டிசெம்பர் 31 இல் முடிவுற்ற ஆண்டிற்கான சபையின் மீண்டுவரும் செலவினத்திலும் கூடிய வருவாய் ரூபா 79,372,839 ஆகும். இதனோடொத்த முன்னைய ஆண்டின் மீண்டுவரும் செலவினத்திலும் கூடிய வருவாய் ரூபா 96,343,250 ஆகும்.

**2.2 நிதிக் கட்டுப்பாடு**

| | கணக்காய்வு அவதானிப்பு | பரிந்துரை | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
|---|---|---|---|
| (அ) | மக்கள் வங்கியின் 098-1-001-8-3913967 இலக்கக் கணக்கின் வங்கிக் கணக்கிணக்க விபரத்தின் பிரகாரம் 10 ஆண்டுகளுக்கு மேலாக தொடர்ந்து வரும் ரூபா 202,518 தேறாத வைப்பிலிருந்தது. | தேறாத வைப்பை இனம் கண்டு பொருத்தமான நடவடிக்கை எடுக்க வேண்டும். | 2005 தொடக்கம் தொடர்ந்து வரும் தேறாத வைப்பு ரூபா 202,518 கண்டறியப்படுவது இயலாதது ஆகும். ஆகவே, உள்ளூராட்சி உதவி ஆணையாளரின் அறிவுறுத்தலின்படி நடவடிக்கை மேற்கொள்வோம் |

| | | | |
|---|---|---|---|
| (ஆ) | கொடுப்பனவு மறுக்கப்பட்ட காசோலைக் கணக்கில் இருந்த ரூபா 142,763 மீதியானது ஆண்டின் இறுதித் தினத்தன்று தீர்வு செய்யப்படாதிருந்தது. | கொடுப்பனவு மறுக்கப்பட்ட காசோலைகள் தீர்வு செய்யப்பட வேண்டும். | 2020 இறுதிக் கணக்கீட்டின் முலம் திருத்தம் செய்யப்படும். |
| (இ) | மக்கள் வங்கியின் பழைய நடைமுறை கணக்கில் ரூபா 47,533 மீதி நெடுங்காலமாக செயலாற்றிவாறிருந்தது. | செயலற்றை கணக்கை முடிவு செய்ய வேண்டும். | நிதிக் கூற்றுக்களில் காணப்படும் இப் பெறுமதியை நீக்குவதற்கு எதிர்காலத்தில் நடவடிக்கை மேற்கொள்ளப்படும். |

## 2.3 வருவாய் நிர்வாகம்

### 2.3.1 மதிப்பிடப்பட்ட வருவாய், பட்டியலிடப்பட்ட வருவாய், சேகரிக்கப்பட்ட வருவாய் மற்றும் வருவாய் நிலுவை என்பன.

மீளாய்வாண்டு மற்றும் முன்னைய ஆண்டிற்கெனச் சமர்ப்பிக்கப்பட்டிருந்த மதிப்பிடப்பட்ட வருவாய், பட்டியலிடப்பட்ட வருவாய், சேகரிக்கப்பட்ட வருவாய் மற்றும் நிலுவை வருவாய் தொடர்பான தகவல்கள் கீழே காணப்படுகின்றன.

| | | 2018 | | | | 2017 | | | |
|---|---|---|---|---|---|---|---|---|---|
| | வருவாயினதும் தோற்றுவாய் | மதிப்பிடப்பட்ட வருவாய் | பட்டியலிடப்பட்ட வருவாய் | சேகரிக்கப்பட்ட வருவாய் | டிசெம்பர் 31 இல் உள்ளவாறு மொத்த நிலுவை | மதிப்பிடப்பட்ட வருவாய் | பட்டியலிடப்பட்ட வருவாய் | சேகரிக்கப்பட்ட வருவாய் | டிசெம்பர் 31 இல் உள்ளவாறு மொத்த நிலுவை |
| | | ரூபா | ரூபா | ரூபா | ரூபா | ரூபா | ரூபா | ரூபா | ரூபா |
| (i) | தீர்வையும் வரியும் | 59,438 | 46,223 | 52,151 | 43,132 | 53,472 | 46,575 | 49,929 | 43,972 |
| (ii) | வாடகை | 4,235 | 6,102 | 10,901 | 3,352 | 11,643 | 3,154 | 606 | 3,524 |
| (iii) | அனுமதிப்பத்திரக் கட்டணங்கள் | 1,020 | 1,220 | 1,120 | - | 1,072 | 697 | 697 | - |
| (iv) | ஏனைய வருமானம் | - | 78,928 | 78,928 | - | - | 97,406 | 97,406 | - |
| | | 64,693 | 132,473 | 143,200 | 46,484 | 66,187 | 147,832 | 148,638 | 47,496 |

### 2.3.2 தீர்வையும் வரியும்

| கணக்காய்வு அவதானிப்பு | பரிந்துரை | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
|---|---|---|
| மீளாய்லாண்டின்போது மொத்த தீர்வையினது அறவீட்டின் 41 சதவீதம் நிலுவை அறவீடும் 56 சதவீதம் நடப்பாண்டு அறவீடும் ஆகவிருந்தது. ஆண்டின் இறுதித் தினத்தில் உள்ளவாறான மீதிகளது நிலுவை ரூபா 43 மில்லியனாகும். | தீர்வை நிலுவையை அறவிட நடவடிக்கை எடுக்க வேண்டும். | ஏற்றுக் கொள்ளுகிறோம். நிலுவையை அறவிடுவதற்கு நடவடிக்கை எடுக்கப்படும். |

**2.3.3 கடை வாடகை**

| கணக்காய்வு அவதானிப்பு | பரிந்துரை | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
|---|---|---|
| பழைய வர்த்தகச் சந்தையில் அமைந்துள்ள 8 கடைகள் மற்றும் 5 வர்த்தகக் கூட்டுத்தொகுதிகளில் உள்ள 108 கடைகள் என்பவற்றிலிருந்து 2019 டிசெம்பர் 31 இல் உள்ளவாறிருந்த கடை வாடகை நிலுவை ரூபா 3,410,564 ஆகும். நடப்பாண்டில் 11 கடைகளில் வாடகை எதுவுமே பெறப்படவில்லை. ஆண்டின் இறுதித் தினத்தன்று உள்ளவாறான மொத்த வாடகை நிலுவை ரூபா 730,185 ஆகும். | கடை வாடைக நிலுவையைத் தாமதமின்றி அறவிட வேண்டும். | தலைமை அலுவலகத்திலும் உப அலுவலகத்திலும் சரியான கடை வாடகை நிலுவை ரூபா 4,016,906 ஆகும். அம்மீதிகள் கணக்குடன் இணங்கவில்லை வருடாந்தம் கடை வாடகைக்கான பில் வழங்கும் போது ஏற்படும் தவறே இதற்கான காரணமாகும். 2020 இறுதிக் கணக்கு தயாரிக்கும் போது சீராக்கப்படும். |

**2.3.4 நீதிமன்றத் தண்டப்பணம்**

| கணக்காய்வு அவதானிப்பு | பரிந்துரை | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
|---|---|---|
| கடந்த 05 ஆண்டுகளாக சபை நீதிமன்றத் தண்டப்பணம் வருவாய் எதனையும் பெற்றிக்கவில்லை. மீளாய்வாண்டில் இறுதியில் உள்ளவாறு பெற வேண்டிய நீதிமன்றத் தண்டப்பணம் ரூபா 24,000,000 ஆகும் | தாமதமின்றி பெறுவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட வேன்டும். | முன்னைய ஆண்டுகளின் சபை பெற வேண்டிய நீதிமன்றத் தண்டப்பணம் பரிசீலிக்கப்பட்டு அதற்குறிய அறிக்கையை மஜிஸ்டிரேட் நீதிமன்றத்திற்கு அனுப்பப்பட்டுள்ளது. இதுவரை அந்த அறிக்கை பரிசீலிக்கப்பட்டு சபையை வந்தடையவில்லை . |

**3. செயற்பாட்டு மீளாய்வு**

**3.1 செயலாற்றல்**

பிரதேச சபைகள் கட்டளைச் சட்டத்தின் 3 ஆம் பிரிவின் கீழ் பொதுமக்கள் சுகாதாரம், பொது பயன்பாட்டுச் சேவைகள் மற்றும் பொது நெடுஞ்சாலைகள் தொடர்பான விடயங்களை முறைப்படுத்தல் மற்றும் நிர்வகித்தல், பொதுமக்களின் பொழுதுபோக்கு வசதிகள் மற்றும் நலன்புரி போன்ற சபையினால் நிறைவேற்ற வேண்டியிருந்த குறிக்கோள்களை நிறைவேற்றுதல் தொடர்பாக வெளிப்படுத்தப்பட்ட விடயங்கள் கீழே காணப்படுகின்றன.

**(அ) கைவிடப்பட்ட பணிகள்**

| கணக்காய்வு அவதானிப்பு | பரிந்துரை | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
|---|---|---|
| மதீப்பீட்டு பெறுமதி ரூபா 3,706,236 ஆகவுள்ளதும் முன்மொழியப்பட்டதுமான 09 வீதப் புனரமைப்பு செயத்திட்டங்கள் கைவிடப்பட்டிருந்தன. | செயல் நடவடிக்கைத் திட்டத்தின் பிரகாரம் நடவடிக்கை எடுக்க வேண்டும் | கருத்து வெளியிடவில்லை |

**(ஆ) திண்மக் கழிவு முகாமைத்துவம்**

| கணக்காய்வு அவதானிப்பு | பரிந்துரை | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
|---|---|---|
| சபை கொம்போஸ்ட் பிரிவு ஒன்றை நடாத்திய போதும், அதிகாரத்திற்குட்பட்ட பிரதேசத்தின் ஒட்டுமொத்த கழிவுக்குள்ளாகும் கழிவுக் கொம்போஸ்ட்க்கு அது போதுமானதாக அமையாததால் கொம்போஸ்ட் பிரிவை விரிவடையச் செய்யவோ அல்லது கழிவு பொருட்களைப் பயன்படுத்தி ஜீவ வாயுவை உற்பத்தி செய்யும் தொழில்நுட்பத்தை அமுல்ப்படுத்தவோ முடியவில்லை. | திண்மக்கழிவு முகாமைத்துவ வசதியைக் வியாபிக்க நடவடிக்கை எடுக்க வேண்டும். | கொம்போஸ்ட் பிரிவை வியாபிப்பதற்கான போதிய இடவசதி சபையிடம் இல்லாமை சர்ச்சைக்குரியதாக உள்ளது. கழிவுக்குள்ளாகும் கழிவுப் பொருட்களை உபயோகித்து தனியார் துறையினறது உதவியுடன் ஜீவ வாயுவை உற்பத்தி செய்யும் ஆற்றலை எதிர்காலத்தில் கண்டறிந்து எதிர்காலத்தில் முறையான விதிமுறைகள் திட்டமிடப்படும். |

## 3.2 மனிதவள முகாமைத்துவம்

| கணக்காய்வு அவதானிப்பு | பரிந்துரை | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
|---|---|---|
| (அ) 2019 டிசெம்பர் 31 இல் உள்ளவாறான அங்கீரிக்கப்பட்ட பதவியில் உள்ள வெற்றிடங்கள் 11 ஆகும். | அத்தியாசிய பதவி பணி வெற்றிடங்கள் நிரப்பப்பட வேண்டும். | கருத்து வெளியிடவில்லை |
| (ஆ) சேவையில் இடைநிறுத்தப்பட்ட 02 ஊழியர்களிடமிருந்து அறவிட வேண்டிய ரூபா 237,442 கடன் | கடன் நிலுவையை அறவிட நடவடிக்கைகள் | சபையின் ஒழுக்காற்று கட்டளைப் பிரகாரம் சேவை |

| | | |
|---|---|---|
| மீதியில் எதுவுமே நடப்பாண்டில் அறவிடப்படவில்லை . | எடுக்க வேணடும். | இடைநிறுத்தப்பட்ட திரு.டீ.சீ.பீ.ஹத்தொடுவ இடமிருந்து அறவிடப்பட வேண்டிய ரூபா 108,250 சேவை விலகிய திரு.எம்.வீ.டீ.விஜிதவிடமிருந்து ரூபா 129,492 என்பனவற்றை அறவிடுவதற்கு சட்ட நடவடிக்கை மேற்கொள்ளப் பட்டுள்ளது. |

### 3.3 செயற்பாட்டு வினைத்திறமையின்மை

| கணக்காய்வு அவதானிப்பு | பரிந்துரை | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
|---|---|---|
| பொது வசதிகளுக்காக சபை பெற்ற 02 ஏக்கர் 18 பர்ச்சஸ் விசாலமான காணி 2016 யூன் 30 ஆம் திகதியன்று ஓராண்டிற்கு மாலபே மாதிரி ஆண்கள் பாடசாலைக்கு விளையாட்டு மைதானமானப் பயன்படுத்துவதற்கென புரிந்துணர்வு ஒப்பந்தத்தின் கீழ் வழங்கப்பட்டிருந்தது. உடன்படிக்கை முடிந்து 02 ஆண்டுகளாயியும் காணியைத் திரும்ப பெறுவதற்கான நடவடிக்கை எடுக்கப்படவில்லை . | இச் சொத்தை சபை சுவீகரிக்க நடவடிக்கை எடுக்க வேண்டும். | 2016 ஆம் ஆண்டில் ஏற்பட்ட புரிந்துணர்வு ஒப்பந்தத்தின் அடிப்படையில் விளையாட்டு நடவடிக்கைகளுக்கு 01 ஆண்டிற்கு அப்பாடசாலைக்கு வழங்கப்பட்டிருந்தது. உடன்படிக்கை காலம் முடிவடைந்த போதும் பல சந்தர்ப்பங்பளிலும் காணியை திரும்ப தராமையால் அங்கு நிலஅளவை மேற்கொண்டு அதனை சபையின் சொத்தாக அறிவிக்கும் பெயர்ப் பலகை பொறிப்பதற்கு பாடசாலை எதிர்ப்பு தெரிவித்ததால் அந்த நடவடிக்கை கைவிடப்பட்டது. |

### 3.4 பயன்படுத்தப்படாததும் குறைவாக பயன்படுத்தப்படுவிதமான சொத்துக்கள்

| கணக்காய்வு அவதானிப்பு | பரிந்துரை | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
|---|---|---|
| கூட்டுத்தொகைத் பெறுமதி ரூபா 5,850,000 ஆகவுள்ள 03 கெப் வண்டிகள், 04 டிராக்டர்கள் பெறுமதி | கைதவிர்ப்பு செய்ய அல்லது பழுதுபார்க்கத் நடவடிக்கை எடுக்க வேண்டும். | வேறு அரச நிறுவனங்கள் வேண்டியவாறு 03 கெப் வணடிகளும் அவர்களுக்கு வழங்கப்படும். ஒரு டிராக்டர் |

| | | |
|---|---|---|
| கணிப்பிட முடியாத ஒரு கைடிறக்டர் என்பன பிரதேச சபையின் உப அலுவலக வளாகத்தில் துறுப்பிடித்தவாறிருந்தன. அவற்றை பழுதுபார்த்துப் பயன்படுத்த அல்லது கைதவிர்ப்புச் செய்ய நடவடிக்கை எடுக்கவில்லை. | | கைதவிர்ப்புக்காக பரிந்துரை செய்யப்பட்டுள்ளது. |

**4. உள்ளகக் கணக்காய்வு**

| கணக்காய்வு அவதானிப்பு | பரிந்துரை | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
|---|---|---|
| 2019 ஆம் ஆண்டின் பொருட்டு நிர்மாண வேலைகள், பொது வசதிகள் மற்றும் காணி கட்டிடங்கள் சம்பந்தமாக போதிய உள்ளகக் கணக்காய்வு மேற்கொள்ளப்படவில்லை. | குறிப்பிட்ட பிரிவுகளில் முகாமைத்துவ விசேட கவனம் செலுத்த வேண்டும். | கணக்காய்வில் சுட்டிக் காட்டப்பட்ட விடயங்கள் சம்பந்தமாக கூடுதல் கவனம் மேற்கொள்ளப்படும். |